179437

# திரிபுர சுந்தர மாலை

C

Q25:417
N18
179437

788

4-SEP

உ

தேவிசகாயம்.

# திரிபுரசுந்தரிமாலை.

முதற் பதிப்பு.

இது தனியூர், சாந்தகுணானந்த சபை ஸ்தாபகர்

ஸ்வாமி குணானந்தா அவர்களால்

இயற்றி

கொ. செல்வரங்கம் அன்டு கோ,

அவர்களாற் தமது

சென்னை-மனோன்மணி விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

விலை அணா-1.

தங்கள் விலாசமும் ஒரு அணா ஸ்டாம்பும்

அனுப்பினால்

# சித்தர் தனிமஞ்சரி

## புத்தகம் இனாம்! இனாம்!!

இந்நூல் உலகில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் நேரும் பிணிகளையெல்லாம் விவரித்துக்காட்டி அதைப் போக்குவதற்குரிய மார்க்கத்தையுந் தீட்டிச் சாந்த குணத்தை ஒவ்வொருக்கும் ஊட்டி அவரவர்களுக்கு நேர்ந்த கர்மங்களை யெல்லாம்வாட்டிப் பலவிதமாகிய புண்ணியங்களை யெல்லாம் ஈட்டி சதா சாந்தகுணானந்த சபையைக்கூட்டித் தீவினைகளெல்லாம் ஓட்டி இந்த நூல் அனேகர்களும் எனக்கோ உனக்கோ என்று வாங்குவதில் போட்டிகொள்ளும்படியாக வெகு விசித்திர சாந்த சித்தர் நூல் அற்புத மாட்சிமையுற்ற மகிமைகளையும் மாந்தர்களுக்கு விளக்கிக் காட்டுமென்றுணர்க. (உடனே முந்துங்கள்.)

மானேஜர்,

சாந்தகுணானந்த சபை,

தனியூர், மாயவரம்,

உ

தேவிசகாயம்.

# திரிபுரசுந்தரி மாலை.



இதன் விலை அணா-1.

இது தனியூர், சாந்தகுணானந்த சபை ஸ்தாபகர்
ஸ்வாமி குணானந்தா அவர்களால் [illegible]
இயற்றி

கொ. செல்வரங்கம் அண்டு கோ,
அவர்களாற் றமது
சென்னை-மனோன்மணி விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1918.

4-SEP 1918

தங்கள் விலாசமும் ஒரு அணா ஸ்டாம்பும்
அனுப்பினால்

# சித்தர் தனிமஞ்சரி

## புத்தகம் இனாம்! இனாம்!!

இந்நூல் உலகில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் நேரும் பிணிகளையெல்லாம் விவரித்துக்காட்டி அதைப் போக்குவதற்குறிய மார்க்கத்தையுந் தீட்டிச் சாந்த குணத்தை ஒவ்வொருக்கும் ஊட்டி அவரவர்களுக்கு நேர்ந்த கர்மங்களை யெல்லாம்வாட்டிப் பலவிதமாகிய புண்ணியங்களையெல்லாம் ஈட்டி சதா சாந்தகுணானந்த சபையைக்கூட்டித் தீவினைகளெல்லாம் ஓட்டி இந்த நூல் அனேகர்களும் எனக்கோ. உனக்கோ என்று வாங்குவதில் போட்டிகொள்ளும்படியாக வெகு விசித்திர சாந்த சித்தர் நூல் அற்புத காட்சிமையுற்ற மகிமைகளையும் மாந்தர்களுக்கு விளக்கிக் காட்டுமென்றுணர்க. (உடனே முந்துங்கள்.)

☞ மானேஜர்,
சாந்தகுணானந்த சபை,
தனியூர், மாயவரம்,

179437

உ

தேவிசகாயம்.

# திரிபுரசுந்தரிமாலை.

மாமேவுமா தரசாகியே மதியார்ந்தநல்
றுதலாளுமாய்த்
தேமேவுநெஞ் சினளாகியே சிவையாகிசின்
மயளாகியும்
நேயார்மனத் தன்பாகியே நிகமாசலந்
தனிலேயுறை
தூவார்திரி புரசுந்தரி துணையாகுவாய்
துணையாகுவாய். (க)

பெண்ணில்மிகநல்லாளெனப் பெயர்கொண்டுமா
பேழோங்கவே
மண்மீதிலே மாந்தர்க்குமா வினைதீர்த்துநல்
மகிழ்வையருள்
வண்ணக்கிளி மொழியாருநின் வாகைமலர்ப்
பதமண்டினேன்
தண்ணார்திரி புரசுந்தரி தயைசெய்குவாய்
தயைசெய்குவாய். (உ)

ஆதிபரா பரியாகியு மருமாமறைப்
பொருளாகியும்
சோதிப்பெருங் குன்றாகியுந் தூண்டாச்சுடர்க்
கொழுந்தாகியும்

1925 417
N8

வேதாசலத் தெம்மானிட மேவுந்திரி
புரசுந்தரி
மாதேவியென் பிழையாவுமே மன்னிப்பையே
மன்னிப்பையே. (௩)

ஆரணனோ டாடுமெழி லாட்சிமிகு
ஆரணியாம்
நாரணியே காருணியே நான்மறைபு
மோலமிடும்
பூரணியே திரிபுரசுந் தரியாமொளிர்
புண்ணியமே
ஏரணியே யேழைமனு வேற்றருளே
ஏற்றருளே. (௪)

அருளேபழுத் தொழுகுபரம் பொருளாகியே
புவனிதனில்
மருளார்மன மாந்தர்க்கெலா மாயைகளைச்
சுஞானமாம்
இருளேயொழித் தொளியேதரு மெந்தாய்திரி
புரசுந்தரி
தெருளார்மதி சுந்தரியினிச் சேயேனையே
சேயேனையே. (௫)

ஆதாரமில் லவனிதனி லணுவேனுமே
யில்லாமலே
மாதாவேநின் மாட்சிமிகு மலர்ப்பாதமே
கதியென்னவே

வேதாகமப் படியேயுனை வேள்விபுரிந்
தேத்தித்தொழும்
வீதமறி கில்லேனுறு வினைதீர்ப்பையே
வினைதீர்ப்பையே. (௬)

அம்புவிக்கண் மாட்சிமிகு மருமாமறைக்
கிரிதன்னிலே
உம்பர்களோ டேனையரும் மோதிப்பணிந்
தேத்துமெழில்
அம்பிகைநீ திரிபுரசுந் தரியாயமர்ந்
தொளிர்கின்றநின்
கெம்பீரதா னென்சொல்லுகேன் கிருபாநிதி
கிருபாநிதி. (௭)

பத்திநெறி செய்தேவுளப் பரிவாகவே
பணிவோர்களை
முத்திவழி கூட்டியரு ளுத்தமியா
யோங்குபுகழ்
சத்தாகியுஞ் சித்தாகியுஞ் சத்திசிவை
சாம்பவியாய்
நித்தியமதாகியொளிர் நிகமாசனி
நிகமாசனி. (௮)

179437

கண்ணாரநின் மலர்ப்பாதமாங் காட்சிதனைக்
கண்டேமிகத்
தண்ணார் மதுமே யிறுமாந்தயித் தமியேனுள
மிந்நாளிலே

புண்ணும்வகை யெல்லாமறிந் தன்பாகவே
புன்மைதவிர்
பெண்ணின்மிக நல்லாயிது பேராண்மையே
பேராண்மையே. (௯)

கூற்றனெனைக் கொண்டேகவே குறுகிவருங்
காலமெனைக்
காத்தேகடைத் தேற்றவலக் கருணாகரி
கடையேனெதிர்
தோற்றியெனை கைக்கொண்டுமா சாயுச்சியச்
சுகவாழ்வளித்
தேற்றுள்வதுன் கடனாகுமே சிவைசங்கரி
சிவைசங்கரி. (௧௦)

பெண்ணாசையாற் புனிதவழி நில்லாப்பிழைக்
கிந்நாளிலே
பெண்பாலரா மறிவாளரைப் பெறவேபணித்
தெளியேனையே
யெண்ணாதுமே யெண்ணியுறை யெந்தாயென
கின்மைதவிர்
பெண்ணில்மிக நல்லாயிது பேராண்மையே
பேராண்மையே. (௧௧)

வேதாளியோ டாடுமெழில் வேதாசலத்
திடமேவுநின்
பாதாம்புயப் பேழ்தன்னையிப் பார்மீதிலே
பாடுந்திறம்

போதாதவென் னைமீதமர்ந் தண்ணார்தமிழ்
பொழியவருள்
நீதமுனக் கிதுவாகுமே நிகமாசனி
நிகமாசனி. (கஉ)

செய்நன் றியே சிறிதுமெணா திரவும்பகல்
சிற்றஞ்செறி
கையருற வாடிமிகக் கணமேயிழந்
திந்நாளிலே
வெய்யேனெனப் பெயரும்படைத் திதுவோவிதி
வசமென்றெணிப்
பையுளுறும் பேதைக்கருள் பவநாசனீ
பவநாசனீ. (கங)

தீராவினை தீர்க்கவல தேவிபரா
சத்தியெனப்
பாரெங்குமே புகழோங்குமா பாதாம்புயந்
தனையேதினம்
பாராயணஞ் செய்யாதவிப் பாலன்பிழை
பொறுத்தேமுகம்
பார்த்தாளவுன் கடனாகுமே பவநாசனி
பவநாசனி. (கச)

தாயாகியுந் தமராகியுந் தரைமீதிலே
யிதுகாறுமே
சேயேன்வினை தீர்த்தாண்டமா தேவிதிரி
புரசுந்தரி

வாய்காலொடு விழிதானுமே வகைகெட்டுளம்
நலியாமலே
பேயேன்முகம் பார்த்தாளிது பேராண்மையே
பேராண்மையே. (கரு)

வீணாளொழித் தந்தோமிக வினைதேடியிவ்
வெளியேனுமே
காணாதமா காட்சியெலாங் காட்டுங்கழுக்
குன்றத்திலே
மாணோங்குநின் மலர்ப்பாதமே வந்தண்டினேன்
மாதேவியென்
பேணுக்கிரங் கருளாயிதென் பேராசையே
பேராசையே. (கசு)

திரிபுரசுந்தரிமாலை

முற்றிற்று.

325:(51) N17
179437

மஹாமெளி மாயூரந் தனியூர்

# சாந்த குணானந்த சபை சட்ட திட்டம்.

## ஓ ! செந்தமிழ்க் கல்விச் செல்வர்காள் !!

உலகத்திலுள்ள உயிர்கட்கெல்லாம் மானுடரே சிறந்தவர் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். உயிர்களெல்லாம் புல்பூண்டு முதலிய அற்பப் பிறவிகளினின்றும் தாம் செய்யும் நல்ல கருமத்தினால் மானுடப் பிறவியடையும், மனிதப்பிறவி யடைந்தவர் பல நூல்களையும் கற்று, கற்றதன்படி பல நல்லறங்கள் புரிந்து மற்ற ஜீவராசிகளை முன்னேற்ற மடையச்செய்து பக்திவழி நிற்பதே முறைமை. இவ்வொழுக்கத்தை யநுஷ்டிக்கவே சாந்த குணானந்த சபையும் ஏற்பட்டிருக்கிறது. இச்சபையிற் சேர்ந்து உலகத்திற்கு உதவி புரியாமல் வாழ்நாளை வீணாகக்கழிப்பதில் ஒரு சிறிதும் பயனில்லை என்று யாவரும் அறிந்த விஷயத்தை வியாபகம் ஊட்டும் சாந்த குணம். (சபையின் நோக்கங்கள்.)

(1) சபையிற் சேர்ந்தவர் ஒவ்வொருவரும் கோபம் முதலிய துர்க்குணங்களைக் கைவிட்டு உலக தர்மத்திற்காக வெளியில் வேறாக விருப்பினும் சிறிதும் மனக்கலக்கமின்றி தெய்வ பக்தியுடனிருத்தல் வேண்டும். அவர் எவ்வகுப்பினரே யாயினும், எத்தொழிலின ராயினும் கடவுளை தினந்தோறும் தான் இருக்குமிடத்திலிருந்துகொண்டே காலை 6-மணிக்கும் பகல்-12—மணிக்கும் மாலை 6—மணிக்கும் இரவு 8-மணிக்கும் தியானித்தல் முக்கிய குணம்.

(2) இச்சபைக்கு கட்டணத் தொகையாக ரூபாய்-2 கட்டிய பின்னர் தங்களாலியன்ற தொகையை மாதந்தோறும் செலுத்தி வரவேண்டும். அங்கத்தினர்கள் பின்பு 5—வருஷங்கட்கெல்லாம் ஏருக்கால் கஷ்டப்படுகையில் சபையார் அவர்களுக்கு இயன்ற உதவி செய்வர், அல்லது தாம் கட்டிச்சேர்ந்த பணத்தைக் கேட்டவுடன் கொடுப்பர்.

(3) சபையாரில் எவருக்கேனும் பிரார்த்த காமத்தினால்பிணிமுதலாயின பிடித்திருந்தால் அவைகளைப்போக்க இந்தச் சபையில் சேர்ந்த அன்பர்களால் ஏககால தியானத்தால் சிறிது குணப்படுத்த முயலுவர்.

(4) (சபையில் சேர்ந்தவர்) அங்கத்தினர் வெவ்வேறு இடங்களிலிருந்தும் அவரவர் அபிப்பிராயங்களை அப்போதைக்கப்போது தபால் மூலமாய் வெளிப்படுத்தலாம்.

(5) மாதத்தில் 2-அல்லது மூன்று தடவையாவது பெரியோர்களைக்கொண்டு பிரசங்கம் சபையில் நடைபெறும்.

(6) சிறிது காலம் கழித்து ஷை சபையின் மூலம் ஒரு குணப்பத்திரிகைப் பிரசுரிக்கத் தயாராயிருக்கின்றது.

(7) அங்கத்தினர்களெல்லோரும் பலவிடங்களிலிருந்தும் ஒவ்வொரு சங்கத்திற்கும் வரமுடியாததால் ஓர்வருஷத்தில் 2—அல்லது மூன்று பொதுக் கூட்டங்களாவது கூடி தங்கள் எண்ணங்களை அப்பொழுது வெளியிடலாம்.

(8) சபையினர் ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு இதர பிராணிகளுக்கு எவ்விதத்திலாவது தம்மால் இயன்ற சாந்த உதவிசெய்து அதை சாந்த குணானந்த பாக்கட்டைரியை சபையின் மூலமாய் வருடா வருடம் வாங்கி தங்கள் தங்கள் தோற்றங்களை நித்ய நியமத்தின்படி குறித்து வைத்துக்கொள்ள குண நலம் வேண்டும்.

(9) உலகம் நிலையாததினால் சுயநலம் பாராட்டாது மன்னுயிரைத் தம்முயிராக நடத்த எல்லோரும் முயலவேண்டுமென்பதே இச்சபையின் பெருநோக்கம் சபை சம்மந்தம. பெரிய ரூல்ஸ் புத்தகம் வேண்டுவோர் 2-ரூபாய்க் கொடுத்து இச்சபையில் சேர்ந்தவர்களுக்கு இனாமாய் அனுப்பப்படும்.

சாந்த குணானந்த சபா ஸ்தாபகர்.

☞ ஸ்வாமி குணானந்தம் தளியூர், மாயவரம்.

9B
11-177